(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 1(1).]** # பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 சனவரி 25 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2022 பெப்ரவரி 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022.01.03 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி அமைச்சரது சலுகைப் பொதிக்கு ஏற்ப அறுவடை பாதிப்புக்காக நிவாரணம் வழங்கப்படும் பயிர் வகைகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பயிருக்குமான பாதிப்பினை மதிப்பீடு செய்கையில் கருத்திற்கொள்ளப்படும் அளவுகோல்கள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

30/2022

கௌரவ புத்திக பத்திறண,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்து உப பொலிஸ் பரிசோதகர் வரையான பதவி உயர்வுக்கென பூர்த்தி செய்ய வேண்டிய சேவைக் காலத்தையும்;

(ii) அந்தப் பதவி உயர்வுக்கென பூர்த்தி செய்ய வேண்டிய வேறு தகைமைகளையும்;

(iii) பொலிஸ் விசேட அதிரடிப்படையில், பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்து உப பொலிஸ் பரிசோதகர் வரையான பதவி உயர்வுக்கென பூர்த்தி செய்ய வேண்டிய சேவைக் காலத்தையும்;

(iv) அந்தப் பதவி உயர்வுக்கென பூர்த்தி செய்ய வேண்டிய வேறு தகைமைகளையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சார்ஜன்ட் ஒருவரை விட கூடுதலான சேவைக் காலத்தை ஏனைய பொலிஸ் சார்ஜன்ட் பூர்த்திசெய்ய வேண்டியிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இதனால் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அநீதி நேர்ந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்காலத்தை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கென எடுத்துள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

243/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவிகளில் இன்றளவில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இம்மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

564/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள ஆறுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஆறுகளின் பொறுப்பு குறிப்பிட்ட நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இந்த ஆறுகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1017/2022

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலை இலங்கைக்கு இன்றியமையாத ஒரு சாலை என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) மேற்படி சாலையின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி ஒவ்வொரு கட்டப் பணிகளும் நிறைவு செய்யப்படுகின்ற திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி சாலையின் மூன்றாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி சாலையின் மூன்றாம் கட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1173/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் "சிறுவர்களைப் பாதுகாப்போம் தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில்" ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1186/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அனுமதிப்பத்திரம் பெற்று நடாத்திச் செல்லப்படுகின்ற மதுபான உற்பத்திச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வுற்பத்திச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வுற்பத்திச்சாலைகள் நடாத்திச் செல்லப்படுகின்ற இடங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட மதுபான உற்பத்திச்சாலைகளுள் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூடப்பட்டுள்ள மதுபான உற்பத்திச்சாலைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த உற்பத்திச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு மூடப்பட்ட உற்பத்திச்சாலைகளில் மீண்டும் மதுபான உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1306/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021.03.31 ஆம் திகதியளவில் இத்தாலியில் சேவையாற்றிக்கொண்டிருந்த இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களில் 2019.03.31 திகதி தொடக்கம் 2021.03.31 திகதி வரையான காலப்பகுதியில் மீண்டும் இலங்கைக்கு வருவதற்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவர்களுள் மீண்டும் இலங்கைக்கு வந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவர்களுக்கு மத்தியில் அரசாங்கத்தின் செலவில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1465/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 ஆம் ஆண்டில் இலங்கையின் உள்நாட்டு பெரிய வெங்காயம் உற்பத்தியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அளவு ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பெரிய வெங்காயம் உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1725/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “பிபிதெமு பொலன்னறுவ" மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கதுருவெல மாற்று வீதியின் கி.மீ 0 + 000 முதல் கி.மீ. 2 + 687 வரையிலான பகுதியை, நான்கு ஒழுங்குகளைக் கொண்ட வீதியாக விரிவாக்கும் பொருட்டு தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்கும், அரச விதை நெல் உற்பத்திப் பண்ணைக்கும் சொந்தமான மற்றும் பிரதேசவாசிகளினால் பயன்படுத்தப்பட்ட மேட்டு நிலங்கள், சேற்று நிலங்கள், தரிசு நிலங்கள், வீட்டுத் தோட்டக் காணிகள் மற்றும் நிலையான கட்டிடங்களைக் கொண்ட காணிகள் என்பன அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஒவ்வொரு காணி உரிமையாளர்களுக்கும் அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட வீதிப் பகுதியை விரிவாக்கும் திட்டத்தின் கீழ் தற்போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2022, பெப்ரவரி 08, செவ்வாய்க்கிழமை)**

388/2022

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை சிறுவர்கள் மீதான சரீர தண்டனை தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளின் விளைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் எண்ணிக்கையையும்;

(iii) சரீர தண்டனையானது அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரையை மீறுவதாகக் குறிப்பிட்டு 2020.12.17 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சரீர தண்டனை தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான சீர்திருத்தங்களையும்;

(ii) சரீர தண்டனையைத் தடுப்பதற்கும் இணங்கியொழுகுதலை உறுதிசெய்வதற்குமாக ஏற்படுத்தப்பட்டுள்ள பொறிமுறைகளையும்;

(iii) பலர் சிறுவர்களை பொலிஸ் நிலையத்திற்கும் நீதிமன்றத்துக்கும் கொண்டு செல்ல விரும்பாததால் அவர்கள் மீதான சரீர தண்டனை பிரச்சினைகள் தொடர்பான மனக்குறைகளை கையாள்வதற்கான ஒரு பொறிமுறையை அரசாங்கத்தினால் முன்னெடுக்க முடியுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 பெப்ரவரி 09, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள, யூரியா மற்றும் நெனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ''நெனோ ரஜா'' திரவப் பசளையின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள மொத்த ''நெனோ ரஜா'' திரவப் பசளையின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்ட பசளைக்குரிய பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் பயன்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ''நெனோ ரஜா'' திரவப் பசளையின் அளவு மற்றும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட திரவப் பசளையின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ''நெனோ ரஜா'' திரவப் பசளையினைப் பயன்படுத்துவது தொடர்பில் கமத்தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

31/2022

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு பால் உணவுகள் முக்கியமானவை என்பதையும்;

(ii) இலங்கைக்குத் தேவையான திரவப்பாலின் அளவினை உற்பத்தி செய்ய இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன என்பதையும்;

(iii) திரப்பாலுக்கு நிலவும் கேள்விக்கு நிகரான வகையில் நிரம்பல் போதுமானதாக இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) திரவப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கறவை மாடுகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இறக்குமதி செய்யப்படும் கறவை மாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அதற்கென செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கையில் பால் பண்ணையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திட்டம் யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

244/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நோக்கெல்லை மற்றும் நடைமுறை என்பன தனித்தனியே யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவானது இதுவரை தனது பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு உசாவலொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) குறித்த கணக்காய்வு உசாவலின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

565/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய மூலதன வங்கி என்ற பெயரில் வங்கியொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அந்த வங்கிக்குரிய கிளைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இதுவரை மேற்படி வங்கிக் கிளைகளினால் கடன் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவ்வங்கியை உரிய முறையில் ஒழுங்குறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1018/2022

கௌரவ சாந்த பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்திற்கு நீர்ப்பாசன வசதியை வழங்கும் நோக்கத்துடன் வடமேல் நீர்ப்பாசனக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி நிதி திரட்டப்படும் மூலாதாரம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் பொல்பித்திகம, சியம்பலன்கமுவ வாவிக்கு நீரைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், இதற்குத் தேவையான மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1174/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரச தொழில்முயற்சித் திணைக்களத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1187/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தூண்களுக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுவரும் துறைமுக பிரவேச நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளுக்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iv) இப்பணிக்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1307/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி;

(ii) அந்த நிதியில் பாடசாலை கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி;

எவ்வளவென்பதை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய கழகங்களின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அமைச்சு தலையிடுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றில் எவ்வாறு தலையிடுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 பெப்ரவரி 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் அதிவேக நெடுஞ்சாலைகள் கருத்திட்டங்களுக்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளை முகாமைத்துவம் செய்யும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) அக்காணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக கம்பெனியொன்றினை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கம்பெனி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இல்லையெனில், அக்கம்பெனி எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட கம்பெனிக்கு யாரால் காணிகள் சாட்டப்படுகின்றன என்பதையும்;

(vi) அக்காணிகளைச் சாட்டுவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

32/2022

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) “ஆயுர்வேத சாஸ்த்ரீ” பாடநெறியை பயில்வதற்குத் தேவையான கல்வித் தகைமைகள் யாவை;

(ii) மேற்படி பாடநெறி நடாத்தப்படுகின்ற நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது இப்பாடநெறியைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடநெறிக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதையும்;

(ii) பட்டப்பாடநெறிக்கு ஒப்பான மேற்படி பாடநெறியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் காரணமாக இப்பாடநெறியானது டிப்ளோமா பாடநெறியின் நிலைக்கு தாழ்த்தப்பட்டுள்ளதாகவும்;

(iii) மேற்படி பாடநெறியை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) “ஆயுர்வேத சாஸ்த்ரீ” பாடநெறிக்கு பட்டப் பாடநெறியின் அந்தஸ்தை மீளளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், மேற்படி பட்டதாரிகளுக்கு ஏனைய ஆயுர்வேத வைத்தியர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(iii) மேற்படி பாடநெறிக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்வதை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா;

(iv) மேற்படி பாடநெறியை நிறுத்துவதற்கு அரசாங்கம் கொள்கைரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

245/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கென பத்தரமுல்லை பிரதேசத்தில் கட்டிடமொன்று வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி கட்டடத்தினதும் அதன் உரிமையாளரினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்திற்காகச் செலுத்தப்படும் மாதாந்த மற்றும் வருடாந்த வாடகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) அதிகளவான தொகையைச் செலவிட்டு ஆணைக்குழுவிற்காக கட்டடமொன்றை வாடகைக்குப் பெற்றுள்ளமை மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

566/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இஸ்லாம் பாடசாலை பாடப் புத்தகங்களில் மத அடிப்படைவாதத்தை உள்ளடக்கிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிக்கொணரப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பாடங்களை இஸ்லாம் பாடப் புத்தகங்களில் சேர்ப்பதற்கு முன்னின்று செயற்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மத அடிப்படைவாதம் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்களை பாடசாலை பாடப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1019/2022

கௌரவ சாந்த பண்டார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற சிறைச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) கொள்ளளவையும் தாண்டி தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக சிறைக் கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக சிறைக் கைதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1175/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1188/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் கொள்வனவு செய்யப்படும் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவற்றின் கொள்ளளவு யாதென்பதையும்;

(iii) சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகொன்றின் கொள்விலை எவ்வளவென்பதையும்;

(ஆ) சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1308/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஆயுர்வேத மருந்து ஆராய்ச்சி நிறுவனமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை மேற்படி நிறுவனம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தயாரிப்புகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1466/2022

கௌரவ ரோஹண பண்டார,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை தலாவ பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடையறைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுள் இதுவரை பகிர்ந்தளிக்கப்படாதுள்ள கடையறைகளின் எண்ணிக்கை எத்தனை;

(iii) பகிர்ந்தளிக்கப்படாதுள்ள கடையறைகளை விரைவில் பகிர்ந்தளிப்பதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1726/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேருந்து சாலைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு சாலைகளிலும் போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

(iv) மேற்படி ஒவ்வொரு சாலைகளிலும் நிலவுகின்ற ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் மூலமாக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2022 பெப்ரவரி 11, வெள்ளிக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.1/2022

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.2/2022

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.3/2022

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2022

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் உயர் விளைதிறன் கருதி வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்தினைத் தடுத்தலும் பயிர் நட்டஈடு வழங்குதலும்,— சிறிய அளவிலான மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிரிடுகின்ற சாதிக்காய், கிராம்பு, மிளகு, தேங்காய், பல்வேறு பழ வகைகள் போன்ற நிரந்தரப் பயிர்கள் மற்றும் கிழங்கு, வெங்காயம், மரக்கறிகள், நெல் போன்ற போகப் பயிர்களுக்கு மந்திகள், காட்டுப் பன்றிகள், முள்ளம்பன்றிகள், யானைகள் போன்ற பல்வேறு வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளும் இணைந்து தேசிய விவசாய உற்பத்திப் பாதுகாப்புக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும், வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கான முழுமையான இழப்பீட்டினை வழங்கும் பயிர்க் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.6/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குதல்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியின் மூலம் நற்பண்புகளுடன் கூடிய ஒழுக்கசீலமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையினை உருவாக்க முடியுமென்ற போதிலும்,மேற்படி பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற சிரமங்கள் காரணமாக அநேகமான பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தாத காரணத்தினால், நாட்டின் பெரும்பாலான அறநெறிப் பாடசாலைகளுக்கு அத்தியாவசிய மாணவர் மேசைகள், வாங்குகள், ஆசிரியர் மேசைகள், கரும்பலகைகள், வெண்பலகைகள், மற்றும் அதன் சிறு அறநெறி நூலகங்களுக்கான புத்தக அலுமாரிகளை வழங்குவதற்கும், அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிறுமியர் சீருடை (லமா சாரி), தேசிய உடை மாதிரியான உடையொன்றுக்குத் தேவையான துணிகளை வழங்குவதற்கும், தனியார் துறையினர் மற்றும் கொடையாளிகளினதும் பங்களிப்புடன் அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.7/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியொன்றையும் பொருளாதார தலைமைத்துவமொன்றையும் கட்டியெழுப்புதல்,— இலங்கையில் அதிக வட்டிக்கு இயங்குகின்ற நுண்நிதிக் கடன்கள், நிதி நிறுவனக் கடன்கள் மற்றும் குத்தகைக்கடன்கள் பொறியிலிருந்து சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களை மீட்டெடுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்காகக் கொண்ட புத்தாக்க மற்றும் பெறுமதி சேர்க்கின்ற தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு, கமத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு மற்றும் சேவை வழங்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு தளர்த்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தளர்த்தப்பட்ட வட்டித் தொகையொன்றுக்கு நீண்ட காலமாக செலுத்தும் வகையிலான நிதிக் கடன்களை வழங்கும் வங்கியொன்றை தாபிப்பதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மற்றும் தொழில்முயற்சி பொருளாதார தலைமைத்துவமொன்றை கட்டியெழுப்புவதற்கும், இன்றளவில் தொழில்முயற்சித் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து உள்நாட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீளெழுச்சி செயலணியொன்றை உருவாகும் பொருட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.8/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தரப்படுத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால பிரசைகள் புத்திசாதுர்யமிக்கவர்களாவதற்கு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியானது அடிப்படையாக அமைவதனால் நாட்டிலுள்ள முன் பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன் பிள்ளைப் பருவ நிலையங்களை உயர் தரத்தில் பேணிச் செல்ல வேண்டும் என்பதாலும் அந்த நிலையங்களைப் பதிவு செய்து அவை உரிய தர நியமங்களுக்கு அமைவாக பேணிச் செல்லப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றைப் பேணிவரும் முயற்சியாளர்கள் மற்றும் பதவியணியினரிடம் தேசிய தொழில்திறன் சான்றிதழ்கள் (NVQ) இருப்பதனை கட்டாயமாக்குவதற்கும், அவ்வாறான நிலையங்களில் இருக்க வேண்டிய இடவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பரிந்துரைகளை சட்டமாக்குவதற்கும், அவற்றில் பணியாற்றுபவர்களுக்கு பங்களிப்பு ரீதியிலான சமூக பாதுகாப்பு முறையிலொன்றை உருவாக்குவதற்கும், நாட்டிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் அவ்வாறான நிலையங்களை ஆரம்பிப்பதற்காக சலுகை வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும், தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி தேசிய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கொள்கையொன்றை ஆக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.9/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய கூட்டுறவு இயக்கமொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் தற்போதுள்ள கூட்டுறவு முறையானது இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஒரு முறை என்பதாலும், இந்த இயக்கமானது இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய அதாவது சுயஉதவி, பரஸ்பர உதவி, மற்றும் சிக்கனம் ஆசிய கூட்டுறவு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்ளத்தக்க நவீன தொழில் நுட்ப பயன்பாட்டின் ஊடாக பாரிய வர்த்தக வலையமைப்புக்களுடன் சிறந்த முறையில் போட்டியிடக் கூடியவாறு விவசாயத் துறையின் மேம்பாட்டுக்கும் மூலதனப் பிரச்சனை மற்றும் சந்தைப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான மாற்று வழியாகவும் ஏற்றுமதித் துறையின் மேம்பாட்டுக்கும் ஈடுபடுத்தத்தக்க அதிக சொத்துக்களைக் கொண்ட துறை என்பதாலும் தற்போதைய கூட்டுறவு முறையில் மேற் குறிப்பிட்ட நோக்கங்களை மேம்பாடு செய்வதற்காக ஏற்புடைய புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி, கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான உரிமையாளர்களான கூட்டுறவு பங்குரிமையாளர்களின் அதிகாரத்தை அதிகரித்து கூட்டுறவு இயக்கத்தினை முழுமையாக மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்ததினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல்,— பெண்களின் உடல், உள, சமூகப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது நாட்டின் முக்கிய அபிவிருத்தி தேவைப்பாடொன்றாக இருப்பதனால், பெண்கள் உரிய முறையில் நடத்தப்படாமைக்கு எதிராக வழக்கு விசாரணை மூலம் தண்டனை விதிப்பதற்குப் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் துஷ்பிரயோம், பருவமடையாத சிறுமியர் அல்லது பெண்களை வன்புணர்தல் தொடர்பில் பிணை வழங்கப்படாத சட்டங்களை ஆக்குவதற்கும், பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் தத்துவங்களை விஸ்தரிப்பதற்கும், பராமரிப்பு மற்றும் விவாகரத்து வழக்குகளை தாமதிக்காது தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நீதிமன்ற செயன்முறையை ஏற்படுத்துவதற்கும், பஸ் வண்டிகளில் பெண்களுக்கு ஒரு பக்கமாக ஆசன வரிசையை ஒதுக்குவதற்கும், நுண் நிதிக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆளாவோரின் கடனை பதிவழிப்பு செய்வதற்கான சட்டங்களை ஆக்குவதற்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் நீர் மற்றும் சமையல் நடவடிக்கைகளுக்கு குறைந்த செலவைக் கொண்ட எரி சக்தியை உறுதி செய்வதற்கும், சமயலறை உபகரணங்களை சலுகை வட்டி அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக வங்கி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், விதவைப் பெண்களுக்கு கணவர் பெற்றுக் கொண்ட சம்பளம் வழங்கப்படுவதை சட்டமாக்குவதற்கும், தொழில் வாய்ப்பற்ற விதவைகளுக்கு தங்கியிருத்தல் கொடுப்பனவொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கும், சமமான சேவைக்கு சமமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதை சட்டமாக்குவதற்கும், பெண்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு தகுந்த சந்தைப்படுத்தல் வலையமைப்பை ஏற்படுத்தவும் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும், அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.11/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இரத்தினக்கல் ஆபரண துறையின் அபிவிருத்தியை மேம்படுத்தல்,— இரத்தினக்கல் படிமங்கள் உள்ள காணிகளை இனங்காண்பது முதல் இரத்தினக்கல் சந்தைப்படுத்தல் வரையிலான நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட தரப்பினர்கள் சம்பந்தப்படுவதும் பல்வேறு கட்டமைப்புகள் செயற்படுவதும் இடம்பெறுகின்ற போதிலும், அவற்றுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் காணப்படாமை இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமைவதால் இக்கைத்தொழில் தொடர்பான தேசிய

முன்னுரிமைகளை உள்ளடக்கிய தேசிய கொள்கையை வகுத்து கைத்தொழிலின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது சம்பந்தமான இடைத்தொடர்பை கட்டியெழுப்புவதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கல் அல்லது இரத்தினக்கல் பயன்படுத்தப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்கும் வரிச் சலுகை உள்ளிட்ட சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இரத்தினக் கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுரங்கப் பணியாளர்களின் உயிருக்குள்ள அச்சுறுத்தல் மற்றும சுரங்கங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை ஈடுசெய்வதற்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கும் அகழ்வு உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை முன் நிபந்தனையாக சட்டமாக்குவதற்கும், இரத்தினக்கல் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் நிதியை மீள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கும், இரத்தினக்கல் கொள்வனவுக்காக வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும், இரத்தினக்கல் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும் இரத்தினக்கல் பயன்படுத்தி கைப்பணி உற்பத்திகள் உள்ளடங்கலாக மனைசார் கைத்தொழில் வரை உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் வரை சகல துறைகளிலும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் பொருத்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.12/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார நிலையம் உட்பட ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பான புத்தாக்க கைத்தொழில் வலயமொன்றினை உருவாக்குதல்,— ஆரம்ப காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மரபுரிமையாக காணப்பட்ட "சிலோன் ஸ்பைசஸ்" என்ற நற்பெயரை மீளக் கட்டியெழுப்பி உலக சந்தையை வெற்றிகொள்வதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர்களை பாரிய அளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிலையங்களை உள்ளடக்கியதாக அப்பயிர்கள் தொடர்பில் பெறுமதிசேர் புத்தாக்கக் கைத்தொழில் வலயங்களை உருவாக்குமாறும் இந்த ஏற்றுமதி உற்பத்திகளுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கொள்கையை மீளாய்வு செய்து ஏற்றுமதி விவசாயப் பயிர் கைத்தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு பொருந்தும் வகையிலான வரிக் கொள்கை ஒன்றினை உருவாக்குமாறும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு உதவியாக அறுவடை விற்பனையின் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளக் கூடிய முறையிலான கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனோடு விவசாயக் காப்புறுதி ஒன்றினையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.13/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— கண்டிய நடனம், பாரம்பரிய கலைகள், மர வேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்களை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்தல் மற்றும் அவற்றை பாதுகாத்தல்,—இலங்கையின் வரலாற்றுப் பெருமையையும் அடையாளத்தினையும் வெளிப்படுத்தும் பாரம்பரிய கண்டிய நடனங்கள் மற்றும் கலைகள், ஓவியங்கள், மரவேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் எமது நாட்டுக்கேயுரியதும் மிக அரிதான கலாசார மற்றும் கலைகள் என்ற காரணத்தினாலும் அவற்றை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் மேற்படி மரபுரிமைகளைப் பாதுகாத்து பேணிச் செல்லும் கலைஞர்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், கண்டிய மரபுரிமைகளை பாதுகாத்து, மேம்படுத்தி, முறையாக நிர்வாகம் செய்வதற்கு சட்ட ரீதியான மன்றம் ஒன்றையோ அல்லது சபையொன்றினையோ ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.14/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— இலங்கையின் வெளிநாட்டுச் சேவை அலுவல்களை மேம்படுத்துதல்,— இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 8% அளவு பங்களிப்பு வெளிநாட்டிலுள்ள ஊழியப்படையின் மூலம் கிடைக்கப் பெறுவதனால் குறித்த துறையினை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டு ஊழியக் கேள்விக்கு இணையாக ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றைத் ஸ்தாபிப்பதற்கும், வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அவர்களுக்கான பங்களிப்பு ரீதியிலான ஓய்வூதியச் சம்பளம் போன்ற சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டுச் சேவை காரணமாக ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளின் போதும், ஏற்படக் கூடிய விபத்துக்களின் போதும் நட்டஈடு வழங்கக் கூடியவாறான காப்புறுதி முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், அவர்களது சேமிப்புகளுக்கு அதிகளவான வட்டியினை வங்கிகளினுடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களது வீடுகளை நிர்மாணிப்பதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி மற்றும் கடன்களை வழங்குவதற்கும், அரசாங்க தொழில் வாய்ப்புக்களை வழங்குகையில் வெளிநாட்டிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு முன்னரிமை அளிப்பதற்கும் இலங்கைத் தூதுவராலயங்கள் மற்றம் உள்நாட்டு, வெள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் மூலமாக இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் துரிதமாக தீர்ப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றினை உருவாக்குவதற்கும் ஊழியர்களைப் பதிவு செய்கையில் அறவீடு செய்யப்படுகின்ற கட்டணங்களில் இருந்தும் மற்றும் வீட்டுப் பணிக்காக வெளியேறுகையில் முகவர் நிலையம் வழங்கும் பணத்தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகையினைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் குடியகல்வுக்கு முன்னரும் அதன் பின்னருமான நம்பிக்கைப் பொறுப்பொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பொருத்தமான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.15/2022

கௌரவ ரோஹண பண்டார,— உள்நாட்டு விதை உற்பத்திச் செயன்முறையினை உயிர்ப்பூட்டுதல்,— தற்போது உள்நாட்டு விதை உற்பத்தியானது வெளிநாட்டுக் கம்பெனிகளின் பிடியில் சிக்கியுள்ளமையினாலும், அதன் மூலம் உள்நாட்டு விவசாயத் தொழில்துறைக்கு பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளமையினாலும், இந்நிலையைத் தடுக்கும் பொருட்டு உள்நாட்டு விதை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2022

கௌரவ ரோஹண பண்டார,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு முறையான இடமாற்றங்களை வழங்குதல்,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கென முறையான இடமாற்றக் கொள்கை நடைமுறையில் இல்லாதமை காரணமாக அவர்கள் மிகவும் அநாதரவான நிலைக்கு ஆளாகியிருப்பதனால், இச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்காக முறையான இடமாற்றக் கொள்கையொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.17/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தல்.— அபிவிருத்தியடைந்த நாடுகளில்கூட கமக்காரர்களுக்கென பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளதாலும், இலங்கையில் கமக்காரர்களுக்கென நடைமுறையிலுள்ள கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றப்படாமையால் அதன்பால் கமக்காரர்களை ஈர்ப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாலும், கமக்காரர்களுக்கு அதிகளவான நன்மைகள் கிடைக்கும் விதமாக இந்தக் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் அரசாங்கத்தினால் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2022

கௌரவ ரோஹண பண்டார,— கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஆரம்பித்தல்,— தற்போது நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இன்றளவில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்தரக்கூடிய கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்று அரசாங்கத்தினால் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.19/2022

கௌரவ ரோஹண பண்டார,— உள்ளூராட்சி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை வழங்கும்போது நியாயமான கொள்கையொன்றைப் பின்பற்றுதல்,— பொது மக்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியமான செயற்பொறுப்பினை நிறைவேற்றுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் சிற்றூழியர், தொழிலாளர் முதலிய நியமனங்களை வழங்கும் போது பெரும்பாலும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதானியின் பிரிவுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தற்போது காணப்படுவதனால் இந்த நிலைமையை மாற்றியமைத்து குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்படி தொழில் வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளை இலங்கையிலிருந்து இல்லாதொழித்தல்,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளையும் உளரீதியான துன்புறுத்தல்களையும் கண்டித்து 2021.02.12 ஆம் திகதி உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் SC/FR/97/2017 மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் 341(i) ஆம் பிரிவை இரத்துச் செய்வதற்கும் UNCRC இன் இலக்கம் 19, 28(2) மற்றும் 37 ஆம் பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சின் 12/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதனாலும், 2020.03.01 ஆம் திகதி 08 வயது சிறுமியொருவர் பிரம்பால் அடித்து வீட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் கவனம் செலுத்தப்பட்ட போதிலும் மேற்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேனும் அது தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினாலும், சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய நீண்டகால பாதகமான விளைவுகளை வெளிப்படுத்தி 2018.02.02 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய குழுவின் (UNCRC) இலங்கை மீதான கண்காணிப்பு அறிக்கை மூலம் சிறுவர் பாதுகாப்பின் நெருக்கடியான நிலைமை, குறிப்பாக உடல்ரீதியான தண்டனைகளை முடிவுக்குக் கொண்டுவருவது வலியுறுத்தப்பட்டுள்ளதனாலும், 2020.10.06 ஆம் திகதிய பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை இலக்கம் 304/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாரியளவில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவை சம்பந்தமாக திருப்தியடைய முடியாதென கல்வி அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதனாலும், துரிதமாக சட்டங்களைத் திருத்துவதன் மூலமும் தற்போதுள்ள சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— இலங்கையில் உளவியல் ஆலோசகர்களை/உளவியல் சிகிச்சையாளர்களை ஒழுங்குறுத்துதல்,— தொழில்வாண்மையல்லாத மற்றும் எதுவிதமான கிளினிக் சார்ந்த பயிற்சியுமில்லாத போலி உளவியல் ஆலோசகர்களும் உளவியல் சிகிச்சையாளர்களும் இலங்கை முழுவதும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாலும், பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து டிப்ளோமா சான்றிதழை மாத்திரம் பெற்றுக்கொண்டு எதுவிதமான கிளினிக் சார்ந்த பயிற்சி அல்லது தொழிற்துறை நெறிமுறைகளுக்கும் இசைவாகாமல் பல்வேறு நிறுவனங்களைத் தாபித்துக்கொண்டு சமூக ஊடகங்கள் வாயிலாக தம்மை உளவியல் ஆலோசகர்களாக/ உளவியல் சிகிச்சையாளர்களாக அறிமுகம் செய்து தமது கிளினிக் நிலையங்களுக்கு மக்களை வரவழைக்கும் நிலைமை அதிகரித்துள்ளதாலும், உளவியல் ஆலோசகர்களையும் உளவியல் சிகிச்சையாளர்களையும் மட்டுமன்றி உளவியல் ஆலோசனை மற்றும் சிகிச்சை பற்றிய டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளையும் முறையான ஒழுங்குறுத்தலுக்கு உட்படுத்துதல், உள-சமூக சேவைகளை அணுகுவதற்குப் பொருத்தமான நடைமுறையை உருவாக்குதல், பாலியல் பன்முகத்தன்மையில் காலங் கடந்த சிகிச்சை முறைகளாகிய பாலின மாற்று சிகிச்சை முறைகளை தடைசெய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி இலங்கை வாழ் பிரஜைகளுக்கு முறையான உள-சமூக சுகாதார சேவைகளை அணுகுவதற்கு வழிசமைத்துக் கொடுக்கும் வகையில் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.